www.tamilarangam.net

# ஏனிந்த மனிதவேட்டை

தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் (TELO) தெல்லிப்பழைப் பகுதியில் கடந்த 30-6-85 அன்று நள்ளிரவில் கடத்தப்பட்ட எமது தோழர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். காங்கேசன்துறை டாக்டர் ராஜேந்திரா வீட்டில் நடந்த நகைக்கொள்ளை சம்பந்தமாக எமது இயக்கத் தோழர்களைக் கைதுசெய்வதாகக் கூறிக்கொண்டு நடுநிசியில் எமது தோழர்களின் வீடுகளில் (இராணுவத்தினரைப் போலப் புகுந்து வீட்டிலிருப்பவர்களை மிரட்டி எமது தோழர்களை கடத்திச் சென்றனர்) கடத்திச்செல்லப்பட்ட தோழர்களை அடித்து துன்புறுத்தி பொய்யான வாக்குமூலங்களை வற்புறுத்தி எழுதுவித்தபின், இவற்றை எதிர்த்து எமது தோழர்களை விடுவிக்குமாறு மக்கள் நடாத்திய உண்ணாவிரதம், ஆர்ப்பாட்ட ஊர்வலம், மற்றும் மறியல்போராட்டங்களின் பின் எமது தோழர்கள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். தொடர்ந்து எமது இயக்கத்தில் இயங்கக்கூடாது என்று எச்சரித்து விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் எமது தோழர்கள்.

நகைக் கொள்ளை சம்பந்தமாக கைதுசெய்வதாகக் கூறிக்கொண்டபோதும் (கைதுசெய்தவர்களின் நோக்கம் அதுவல்ல என்பது அவர்களின் நடைமுறையிலிருந்து தெரியவந்துள்ளது) டாக்டர் ராஜேந்திரா வீட்டில் நடைபெற்ற கொள்ளையும், அது நடத்தப்பட்டமுறையும் மிக மோசமான திருடர்களின் கைவரிசையே இது என்று சந்தேகிக்க வைக்கிறது. ஏதாவதொரு விடுதலை இயக்கம் இக் கொள்ளையில் ஈடுபட்டிருக்கும் என்று நாம் சந்தேகிக்கவில்லை. அப்படி இருந்தால் அது மிகவும் மோசமான ஒரு கேடுகெட்ட நடவடிக்கை என்று நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இக் கொள்ளை நடைபெற்ற மறுதினம் இது சம்பந்தமாக எமது இயக்கப் பெயரும் பயன்படுத்தப்பட்டிருப்பதால் எமது ஸ்தாபன தோழர்கள் நேரில் சென்று டாக்டருடன் பேசினார்கள். திருடர்களைப் பிடிக்க ஏதாவது துப்புக்கிடைக்குமா என தேடுவதிலும் இத்தகைய தேடுதலில் ஈடுபட்டவர்களுக்கு உதவவும் நாம் தயாராக இருந்தோம்.

ஆனால் இவர்கள் எமது இயக்கத் தோழர்களை கைதுசெய்ய இதைக்காரணமாக கூறினார்களே ஒழிய திருடர்களைப் பிடிப்பது அவர்களின் பிரதான நோக்கமாக இருக்கவில்லை. எமது இயக்கமே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டது என்று எப்பாடுபட்டாவது மக்களை நம்பவைக்கவும் இதைக் காரணமாகக் கூறி மக்களது உணர்வை எமக்கு ஆதரவற்றதான நிலைக்குத் தள்ளி சுதந்திரமாக எமது இயக்கத்தை அழிக்கவும் இவர்கள் திட்டம் தீட்டியிருந்தது தெரியவந்துள்ளது. சின்ன இயக்கங்களை அழிக்கும் முயற்சியில் எமது இயக்கத்தையும் சேர்த்து அழித்துவிட எண்ணியே இவ்வாறு செய்துள்ளனர். எமது தோழர்கள் கைதுசெய்யப்பட்ட அன்று இரவு நள்ளிரவில் எமது ஆயுத சேமிப்பறை ஒன்றை உடைத்து 41 எறிகுண்டுகளையும், அதற்கான பகுதிகளையும், மேலதிக எறிகுண்டுக்குரிய உதிரிப்பாகங்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர். இது இவர்களது நோக்கத்தை மேலும் தெரியப்படுத்துவதாக உள்ளது. இந்த நடவடிக்கைக்கு சிகரம் வைத்தாற்போல, தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் ஆலய நகைகளை கொள்ளையடித்த பழியையும் எம்மீது சுமத்த முயன்றுள்ளார்கள். அவர்களை துன்புறுத்தி இப் பொய்க் குற்றச்சாட்டுக்கு 'ஒப்புதல்' தெரிவிக்கும்படி நிர்ப்பந்தித்துள்ளார்கள். கோவில் நிர்வாகத்தினரிடம் நாமே செய்ததாக கூறும்படி செய்வித்துள்ளார்கள். சிறிது காலத்திற்கு முன்னர் ஏழாலையைச்சேர்ந்த சின்னவன் என்பவர் இதே குற்றத்தை புரிந்ததாக கொண்டுசெல்லப்பட்டு மறைந்துபோனார் ஏனோ வசதியாக மறந்துவிட்டார்கள். எம்மீது எப்படியாவது சேறு பூசிவிடவேண்டுமென்ற விருப்பத்தினாலேயோ இப்படி உண்மைகளை காணத்தயாராக இல்லாதிருக்கிறார்கள் என நம்புகிறோம். கோவில் கொள்ளை நடைபெறும்போது எமது இயக்கத்தின் பெயர் அடிபட்டது. இவர்கள் மார்க்சியம் பேசுபவர்கள், கடவுளை நம்பாதவர்கள் எனவே இவர்கள்தான் இது செய்திருக்கவேண்டும் என்று கதை பைக் கட்டிவிடப் பலர் பின்னணியில் இருந்ததாக நாம் அறிவோம். குறிப்பாக இந்த துர்க்கை அம்பாள் ஆலய விசயத்தில் எமது இயக்கப் பெயரும், பிற சோசலிச கண்ணோட்டம் கொண்ட இயக்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மொன்றின் பெயரும் பரவலாக அடிபட்டது. அனேகமான இயக்கங்கள் இது சம்பந்தமா[illegible]ண்டன அறிக்கைகள் வெளியிட்டிருந்தன.

கொள்ளைகளை செய்வதும் செய்த கொள்ளைகளை பறுப்பதுமட்டுமல்ல அதற்கும் மேலேபோய் இத்தகைய கொள்ளைகளை செய்வதே தப்பு என்று அறிவிப்பதும் சகசமாகிவிட்டபோது இத்தகைய மறுப்புகட்கு அர்த்தமில்லை என்று அதிருப்தியுடன் இருந்துவிட்டோம். ஆனால் இன்று அதை எம்முடைய தலையிலே கட்டியடிக்க முயற்சி நடக்கிறது.

பரந்துபட்ட மக்களின் நம்பிக்கைகளை நாம் ஒருபோதும் உதாசீனம் செய்பவர்களல்ல. கோவில் நம்பிக்கை, இறைவழிபாடு என்பவை மக்களின் சுதந்திர விருப்பு வெறுப்புக்களைப் பொறுத்தது. கோவில்களில் கொள்ளையிடல்போன்ற செய்கைகள் மத நம்பிக்கை கொண்ட மக்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பையும் மனத்துன்பத்தையும் புரிந்துகொள்ளாதளவுக்கு நாம் எமது மக்களை துச்சமாக மதிப்பவர்களல்ல. மக்கள் சக்தியில் நம்பிக்கை வைத்து மக்களே மக்களின் விடுதலைக்காக போராடுகின்ற மக்கள் யுத்தப் பாதையில் அவர்களை வழிநடாத்தி அயராது பாடுபட்டுவருபவர்கள் நாம். நாம் இத்தகைய ஒரு கொள்ளையை நடத்துவதை என்றைக்குமே நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. துர்க்கை அம்மன் கோவிலில் நடைபெற்ற கொள்ளையையும் அங்கும் கொள்ளையர்கள் நடந்துகொண்ட முறையும் மிகமோசமான மனிதாபிமானமற்ற பரந்துபட்ட மக்களையும் அவர்களின் உணர்வுகளையும் மதிக்காத ஈனத்தனமான செய்கை என்பது எமது உறுதியான கருத்து.

ஆனால், இதையும் எமது ஸ்தாபனத்தினரே செய்தது என்று நிரூபிக்க இந்த இயக்கத்தினர் ஏன்தான் இவ்வளவு படாத பாடுபடுகிறார்களோ தெரியவில்லை. பொய்யாக ஒருவனை திருடனாக குற்றஞ் சாட்டுவது உண்மையான திருடனை தப்பிப்போக வாய்ப்பளிக்கவே உதவிசெய்யும். எல்லாவற்றிற்கும் மேலாக இத்தகைய செயல்களுக்கும் கூட ஒரு ஒழுங்குமுறை உண்டு. நாம் எம்மை ஒரு விடுதலை இயக்கமாக பிரகடனப்படுத்திக்கொண்டு கடந்த ஐந்து ஆண்டுகளாக இயங்கி வருகிறோம். ஓரளவு மக்கள் மத்தியில் வேரூன்றியும் உள்ளோம். எமது ஸ்தாபனத்தை ஒரு விடுதலை இயக்கமாக இவ்வியக்கத்தினர் அங்கீகரிக்காவிட்டாலும் மக்கள் அங்கீகரிக்கிறார்கள், அப்படி இருக்க எமது தோழர்கள் யாரிலாவது சந்தேகம் ஏற்பட்டு அவர்களை விசாரிக்கவேண்டுமென்றால் நியாயப்படி எமது ஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டிருக்கவேண்டும். ஆனால் அதை விடுத்து அவர்களைப் பிடித்து அடித்து அவர்களது அரசியல் உணர்வுகளை கொச்சைப்படுத்தி அவர்களைச் சிறுமைப்படுத்தி மாற்று அரசியல் கண்ணோட்டமுள்ளவர்களுக்கு ஜனநாயக உரிமைகளை வழங்க மறுக்கிற பாசிச நடைமுறைக்கு செல்வது ஒரு விடுதலை இயக்கத்திற்கு அழகா? ஒரு விடுதலை இயக்கம் என்று கூறிக்கொண்டு ஏனைய இயக்கங்களை நசுக்கிவிட துடிப்பது தோழமைக்குப் பதில் பகைமை முறையே மேலும் வளர்க்கும்.

தமிழீழ விடுதலை இயக்கத்தினர் எம்முடன் மோதுவது இது முதல்தடவை அல்ல முதலில் தோழர் நேரு கொலை, பிறகு தென்மராட்சியில் எமது சில தோழர்கள் கடத்தல் அதன் பிறகு கரவெட்டியில் எமது தோழர்கள் கடத்தல், ஊர்காவற்றுறையில் இரண்டு தோழர்கள் கடத்தல் என்று இதற்கு ஒரு நீண்ட பட்டியல் உண்டு இதன் ஒரு நீடிப்பாகவே இப்போது தெல்லிப்பழையில் எமது தோழர்கள் கடத்தப்பட்டமையும் நடைபெற்றது, எம்மீது அபாண்டமான பழிகளை சுமத்துவதும் நடைபெறுகிறது இவை அனைத்திலுமே நாம் அமைதியாகவும் பேசியும் இப்பிரச்சனைகளை தீர்க்கவே முயன்று வந்துள்ளோம் ஆனால் தமிழீழ விடுதலை இயக்கம் தனது தொடர்ந்துவரும் நடவடிக்கைகளால் மேலும்மேலும் எமக்கிடையே பிளவுகளை ஏற்படுத்திக் கொள்வதிலேயே தீவிரமான அக்கறையுடனேயே செயல்பட்டு வந்துள்ளனர்.

ஒன்றைமட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறோம்

''போராளிகள் அழிக்கப்படலாம் போராட்டம் அழிவதில்லை''

''மனிதர்கள் தோற்கலாம் மானிடம் தோற்பதில்லை''

பிளவுகள் பொது எதிரிக்கு மிகவும் சாதகமானவை!

எதிரிக்கு மட்டுமே சாதகமானவை!

தமிழீழ தேசிய விடுதலை முன்னணி

தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்